ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை

+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257

communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව

இலங்கை மத்திய வங்கி

CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

திகதி 2023 ஏப்பிறல் 28


# வெளிநாட்டுத்துறைச் செயலாற்றம் - 2023 மாச்சு

## முக்கிய பண்புகள்

- வர்த்தகப் பற்றாக்குறையானது 2023 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு விரிவடைந்து காணப்பட்டபோதிலும் ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2023 மாச்சில் தொடர்ந்தும் மிதமடைந்து காணப்பட்டது.
- தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் என்பன 2023 மாச்சில் குறிப்பிடத்தக்களவிலானதொரு மேம்பாட்டினைப் பதிவுசெய்தன.
- பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் இறுதிப்படுத்தல் மற்றும் மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட கொள்கைத் தளர்வினால் உந்தப்பட்டு உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் திரவத்தன்மை நிலைமைகளில் ஏற்பட்ட மேம்பாடுகள் என்பவற்றினை நோக்கிய மேம்பட்ட சந்தை மனோபாவங்களினால் ஆதரவளிக்கப்பட்டு 2023 மாச்சில் செலாவணி வீதம் குறிப்பிடத்தக்களவு உயர்வடைந்தது.
- வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அரச பிணையங்கள் மீது அதிகரித்த ஆர்வத்தை காட்டிய அதேவேளையில் 2023 மாச்சு காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய வெளிநாட்டு முதலீடுகள் சிறியளவிலான தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.
- இம்மேம்பாடுகள் 2023 மாச்சு இறுதியளவில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை வலுப்படுத்தின.

## வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம்

### ஏற்றுமதிகள்







| வர்த்தகப் பற்றாக்குறை (ஐ.அ.டொ.பில்) | மாச் | சன-மாச் |
|---|---|---|
| 2022 | 0.8 | 2.4 |
| 2023 | 0.4 | 0.9 |

### இறக்குமதிகள்




### சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள்




### தொழிலாளர் பணவனுப்பல்கள்




### மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்*




* சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கியுள்ளது

### கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் தேறிய உட்பாய்ச்சல்கள் (முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் - தேறிய)




### அரசாங்கத்திற்கான மொத்த உட்பாய்ச்சல்கள்




### வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள் (ஐ.அ.டொ/ரூ)



## வணிகப்பொருள் வர்த்தக மீதி

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிகளின் தாழ்ந்த மட்டத்தின் முக்கிய காரணமாக வணிகப்பொருள் வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையானது, 2022 மாச்சில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 761 மில்லியனிலிருந்து 2023 மாச்சில் ஐ.அ.டொலர் 412 மில்லியனிற்குச் சுருக்கமடைந்தது. இருப்பினும், 2023 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் 2023 மாச்சில் வர்த்தகப் பற்றாக்குறையானது குறிப்பிடத்தக்களவு விரிவடைந்து காணப்பட்டு பருவக்காலக் கேள்வியின் காரணமாக இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பைப் பிரதிபலித்தது. 2023 சனவரி தொடக்கம் மாச்சு வரையிலான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறையானது ஐ.அ.டொலர் 861 மில்லியனாக விளங்கி, 2022இன் அதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2,397 மில்லியனிலிருந்து வீழ்ச்சியடைந்தது. வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட இம்மாற்றத்திற்கு பங்களித்த முக்கிய காரணிகள் வரைபடம் 1இல் காட்டப்பட்டுள்ளன.

**வரைபடம் 1: 2023 சனவரி-மாச்சு வரையிலான காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையின் ஆண்டிற்காண்டு மாற்றத்திற்கு பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொ. மில்)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்[1]

**ஒட்டுமொத்த ஏற்றுமதிகள்: வணிகப்பொருள் ஏற்றுமதிகள் 2023 காலப்பகுதியில் முதற்தடவையாக ஐ.அ.டொலர் 1 பில்லியன் தொகையினைப் பதிவுசெய்து 2023 மாச்சில் மீட்சியடைந்தன.** இருப்பினும், வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2023 மாச்சில் 2.0 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 1,037 மில்லியனிற்கு ஆண்டிற்காண்டு அடிப்படையில் சிறிதளவு வீழ்ச்சியடைந்தன. ஆடைகள் உள்ளடங்கலாக கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 மாச்சில் ஏற்றுமதி வருவாய்களின் வீழ்ச்சிக்கு பிரதானமாகப் பங்களித்தது. அதேவேளை, இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், மற்றும் இறப்பர் உற்பத்திகள் என்பனவற்றின் உயர்ந்த ஏற்றுமதிகளின் முக்கிய காரணமாக ஏற்றுமதி வருவாய்கள் 2023 மாச்சில் மாதாந்த அடிப்படையில் மேம்பட்டிருந்தன. 2023 சனவரி தொடக்கம் மாச்சு வரையான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 2,998 மில்லியனாகப் பதிவுசெய்யப்பட்டு, கடந்த ஆண்டின் அதே காலப்பகுதியின் 7.9 சதவீத வீழ்ச்சியொன்றாக விளங்கியது.

**கைத்தொழில் ஏற்றுமதிகள்:** ஆடைகளினால் பங்களிக்கப்பட்டு வீழ்ச்சியின் குறிப்பிடத்தக்க பங்கொன்றுடன் கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2022 மாச்சுடன் ஒப்பிடுகையில் 2023 மாச்சில் வீழ்ச்சியடைந்தன. இதற்கமைய, அநேகமான முக்கிய சந்தைகளுக்கான (ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய இராச்சியம்) ஆடை ஏற்றுமதிகள் வீழ்ச்சிகளை பதிவுசெய்தன. நீர்க்கல

[1] இலங்கை மத்திய வங்கியின் ஏற்றுமதிகளின் வகைப்படுத்தல் மற்றும் நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4இன் அடிப்படையிலமைந்த ஏற்றுமதிகளின் வகைப்படுத்தல் என்பன முறையே இணைப்பு II மற்றும் இணைப்பு III இல் காட்டப்பட்டுள்ளன.

எரிபொருள் ஏற்றுமதிகளின் சராசரி ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் குறைவடைந்தன. மாறாக, பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் (முக்கியமாக, பொறி மற்றும் சாதனப் பாகங்கள்), இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் (முக்கியமாக, இறப்பர் டயர்கள்) என்பவற்றிலிருந்தான வருவாய்கள் 2023 மாச்சில் அதிகரித்தன.

**வேளாண்மை ஏற்றுமதிகள்:** தேயிலை, வாசனைத்திரவியங்கள் (முதன்மையாக, கறுவா மற்றும் கராம்பு) மற்றும் கடலுணவு (முதன்மையாக, பதனிடப்பட்ட மீன்) என்பவற்றிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் முக்கிய காரணமாக வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2023 மாச்சில் அதிகரித்துக் காணப்பட்டன. வளமாக்கிப் பற்றாக்குறையின் காலங்கடந்த தாக்கத்தின் காரணமாக அளவானது அதனுடைய வீழ்ச்சியடைந்து செல்கின்ற போக்கினைத் தொடர்ந்தபோதிலும் தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக தேயிலை ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் மேம்பட்டன. இருப்பினும், தெங்குடன் தொடர்புடைய உற்பத்திகள் (முதன்மையாக, தேங்காய்த் துருவல் மற்றும் தென்னந்தும்பு), சிறு வேளாண்மை உற்பத்திகள் (முதன்மையாக, பாக்கு) மற்றும் இயற்கை இறப்பர் என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் 2023 மாச்சில் வீழ்ச்சியொன்று காணப்பட்டது.

**கனிப்பொருள் ஏற்றுமதிகள்:** மண் மற்றும் கற்களின் கீழான கருங்கல் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் முக்கிய காரணமாக கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2022 மாச்சுடன் ஒப்பிடுகையில் 2023 மாச்சில் அதிகரித்துக் காணப்பட்டன.

**வரைபடம் 3: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 4: ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்[2]

**ஒட்டுமொத்த இறக்குமதிகள்: பருவகால கேள்வி மற்றும் எரிபொருள் இறக்குமதிகளில் ஏற்பட்ட பகுதியளவிலான மீட்சி என்பன காரணமாக இறக்குமதிச் செலவினம் 2023 பெப்புருவரியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,021 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 மாச்சில் ஐ.அ.டொலர் 1,450 மில்லியனிற்குக் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துக் காணப்பட்டது.** இருப்பினும், இறக்குமதிச் செலவினம் 2022இன் முற்பகுதியிலிருந்து ஆண்டிற்காண்டு அடிப்படையிலான வீழ்ச்சியடைகின்ற போக்கினைத் தொடர்ந்து, 2022 மாச்சுடன் ஒப்பிடுகையில் 2023 மாச்சில் 20.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. சகல முக்கிய இறக்குமதித் துறைகளினதும் செலவினத்தில் ஆண்டிற்காண்டு வீழ்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்டபோதிலும் இடைநிலை

---

[2] இலங்கை மத்திய வங்கியின் இறக்குமதிகளின் வகைப்படுத்தல் மற்றும் நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4இன் அடிப்படையிலமைந்த இறக்குமதிகளின் வகைப்படுத்தல் என்பன முறையே இணைப்பு IV மற்றும் இணைப்பு Vஇல் காட்டப்பட்டுள்ளன.

மற்றும் முதலீட்டுப் பொருட்களில் ஏற்பட்ட வீழ்ச்சி கணிசமானளவிலானதாகக் காணப்பட்டது. அதேவேளை, 2023 சனவரி தொடக்கம் மாச்சு வரையான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த இறக்குமதிச் செலவினம் 2022இன் தொடர்புடைய காலப்பகுதியிலும் பார்க்க 31.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**நுகர்வுப் பொருட்கள்:** உணவல்லா நுகர்வுப் பொருட்கள் சிறியளவிலான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தபோதிலும் உணவு மற்றும் குடிபானங்கள் மீதான தாழ்ந்தளவிலான இறக்குமதிச் செலவினத்தின் காரணமாக நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 மாச்சில் வீழ்ச்சியடைந்தது. தானியங்கள் மற்றும் ஆலைக் கைத்தொழில் உற்பத்திகள் (முக்கியமாக, அரிசி), பாற்பண்ணை உற்பத்திகள், வாசனைத்திரவியங்கள் மற்றும் பழங்கள் என்பவற்றின் இறக்குமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்கதொரு வீழ்ச்சியுடன் உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியானது பரந்த அடிப்படையில் காணப்பட்டது. மாறாக, அநேகமான ஏனைய துணைத்துறைகள் 2022 மாச்சுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தவேளையில், உயர்ந்தளவிலான மருந்து மற்றும் மருந்தாக்கற்பொருட்களின் இறக்குமதி (முக்கியமாக, சிகிச்சைப் பொருட்கள்) காரணமாக உணவல்லா நுகர்வுப் பொருட்கள் மீதான செலவினம் சிறிதளவு அதிகரித்தது.

**இடைநிலைப் பொருட்கள்:** எரிபொருள், பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள், மற்றும் புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் (முதன்மையாக, துணிகள்) என்பவற்றின் தாழ்ந்தளவிலான இறக்குமதிகளினால் உந்தப்பட்டு, இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2023 மாச்சில் வீழ்ச்சியடைந்தது. இருப்பினும், இடைநிலைப் பொருட்களின் கீழான அநேகமான சகல துணைத்துறைகளும் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 மாச்சில் அதிகரித்ததுடன் இதில் எரிபொருள் மீதான இறக்குமதிச் செலவினம் மாதாந்த அடிப்படையில் 90 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்தது. இறப்பர் மற்றும் அதன் பொருட்கள், அடிப்படை உலோகங்கள் (முதன்மையாக, இரும்பு மற்றும் உருக்கு), மற்றும் இரசாயன உற்பத்திகள் என்பவற்றின் இறக்குமதியில் கணிசமானளவிலான வீழ்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்டது. இருப்பினும், கோதுமை, வளமாக்கி, மற்றும் வேளாண்மை உள்ளீடுகள் (முதன்மையாக, விலங்குத்தீன்) என்பன உள்ளடங்கலாக இடைநிலைப் பொருட்களின் வகைகள் ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன.

**முதலீட்டுப் பொருட்கள்:** முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2022 மாச்சுடன் ஒப்பிடுகையில் 2023 மாச்சில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. மூன்று முக்கிய முதலீட்டுப் பொருள் துறைகளினதும், அதாவது பொறி மற்றும் கருவிகள், கட்டடவாக்கப் பொருட்கள் மற்றும் போக்குவரத்து சாதனங்கள், கீழ் பட்டியலிடப்பட்ட அநேகமாக சகல வகைப் பொருட்களும் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன.

**வரைபடம் 5: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 6: இறக்குமதிகளின் உள்ளடக்கம்**




**மூலம்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் வர்த்தகச் சுட்டெண்கள்

இறக்குமதி விலைகளுக்கு ஏற்றுமதி விலைகளின் விகிதமாக விளங்குகின்ற வர்த்தக மாற்று விகிதமானது ஏற்றுமதி விலைகள் சிறிதளவு வீழ்ச்சியடைந்தவேளையில் இறக்குமதி விலைகள் அதிகரித்ததால் 2022 மாச்சுடன் ஒப்பிடுகையில் 2023 மாச்சில் 6.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**வரைபடம் 7: வர்த்தக மாற்று விகிதம்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

2023 மாச்சில் ஏற்றுமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் ஆகிய இரண்டும் 1.0 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) வீழ்ச்சியடைந்தமையானது 2023 மாச்சில் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குத் தாழ்ந்தளவிலான ஏற்றுமதி அளவுகள் மற்றும் விலைகள் ஆகிய இரண்டினதும் ஒருங்கிணைந்ததொரு தாக்கம் என்பதனைச் சுட்டிக்காட்டியது.

**வரைபடம் 8: ஏற்றுமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

இறக்குமதி அளவுச் சுட்டெண் 24.5 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) வீழ்ச்சியடைந்தவேளையில், அலகுப் பெறுமதிச் சுட்டெண் 5.6 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) அதிகரித்தமையானது, இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு இறக்குமதி அளவுகளில் ஏற்பட்ட குறைப்பு முக்கிய காரணமாயமைந்ததென்பதனை எடுத்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 9: இறக்குமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய அபிவிருத்திகள்

**தொழிலாளர் பணவனுப்பல்கள்:** தொழிலாளர் பணவனுப்பல்கள் 2022 மாச்சில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 318 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 மாச்சு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 568 மில்லியனிற்கு உயர்வடைந்து, 2021 ஏப்பிறலிருந்து உயர்ந்தளவிலான தொகையினைப் பதிவுசெய்தன. அதேவேளை, தற்காலிகத் தரவுகளின் அடிப்படையில், 2023 சனவரி தொடக்கம் மாச்சு வரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்காக நாட்டிலிருந்தான மொத்தப் புறப்படுகைகள் மற்றும் 2023 மாச்சு மாதத்திலான புறப்படுகைகள் என்பவை 2022இல் பதிவுசெய்யப்பட்ட 311,056 கொண்ட ஒட்டுமொத்த ஆண்டு புறப்படுகையுடன் ஒப்பிடுகையில் முறையே 72,386 மற்றும் 24,176 ஆகப் பதிவுசெய்யப்பட்டன.

**சுற்றுலாப் பயணிகள்:** 2023 பெப்புருவரியில் பதிவுசெய்யப்பட்ட 107,639 சுற்றுலாப் பயணிகளின் வருகைகளுடனும் 2022 மாச்சில் பதிவுசெய்யப்பட்ட 106,500 சுற்றுலாப் பயணிகளின் வருகைகளுடனும் ஒப்பிடுகையில் 2023 மாச்சில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 125,495இற்கு அதிகரித்துக் காணப்பட்டன. இதற்கமைய, ஆண்டு காலப்பகுதியின் இதுவரையான காலப்பகுதியில் மாதாந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 100,000 மட்டங்களிற்கும் மேலாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தன. 2023 மாச்சில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முக்கிய மூல நாடுகளாக ருஷியா, இந்தியா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் பிரான்சு என்பன காணப்பட்டன. சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் முன்னைய மாதத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 170 மில்லியனுடனும் முன்னைய ஆண்டின் மாச்சு மாதத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 161 மில்லியனுடனும் ஒப்பிடுகையில் 2023இன் தொடர்புடைய மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 198 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளன.

**வரைபடம் 10: மாதாந்த சுற்றுலாப் பயணிகள் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 11: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான வருவாய்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்திஅதிகாரசபை
உரிமம்பெற்ற வங்கிகள்
இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

2023 மாச்சில் அரச பிணையங்கள் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலா் 82 மில்லியன் பெறுமதியிலான குறிப்பிடத்தக்களவிலான தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்த வேளையில், 2023 சனவரி தொடக்கம் மாச்சு வரையான காலப்பகுதியில் ஒட்டுமொத்த தேறிய உட்பாய்ச்சல் ஐ.அ.டொலா் 112 மில்லியனாக விளங்கியது. அதேவேளை, முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக கொழும்புப் பங்குப் பரிவா்த்தனைக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2023 மாச்சு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலா் 8 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்து, 2023 மாச்சில் முடிவடைகின்ற மூன்று மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலா் 1 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றினைத் தோற்றுவித்தன.

## பன்னாட்டு ஒதுக்குகள்

2023 மாச்சு இறுதியில் மொத்த அலுவல்சாா் ஒதுக்குகள் ஐ.அ.டொலா் 2.7 பில்லியனாகத் தொடா்ந்தும் அதிகாித்துக் காணப்பட்டன. இது பயன்படுத்தக்கூடிய தன்மை தொடா்பிலான நிபந்தனைகளுக்குட்பட்ட ஏறத்தாழ ஐ.அ.டொலா் 1.4 பில்லியனிற்கு நிகரான சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கியுள்ளது. மத்திய வங்கி நாணயத்தின் விஞ்சியளவிலான உயா்வினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையில் தலையிட்டமையால் 2023 மாச்சில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்தான ஐ.அ.டொலா் 451 மில்லியன் கொண்ட ஒட்டுமொத்த கொள்வனவொன்றினை மேற்கொண்டதோடு 2023 மாச்சு இறுதியளவில் திரவத்தன்மை ஒதுக்குகளில் குறிப்பிடத்தக்க மேம்பாடொன்றும் ஏற்பட்டது.

**வரைபடம் 12: மொத்த அலுவல்சாா் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்

**செலாவணி வீதங்களின் மீதான நாளாந்த வழிகாட்டல் வீச்சின் நீக்கம் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளின் கட்டாய விற்பனைத் தேவைப்பாடுகளின் நீக்கம் என்பவற்றுடன் இணைந்து 2023 மாச்சு மாத காலப்பகுதியில் செலாவணி வீதத்தில் குறிப்பிடத்தக்க உயர்வடைதலொன்று பதிவுசெய்யப்பட்டது.** மாற்றப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பவற்றிலிருந்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் மத்திய வங்கிக்கான கட்டாய வெளிநாட்டுச் செலாவணி விற்பனைத் தேவைப்பாட்டின் படிப்படியான தளர்வு மற்றும் அதன் பின்னரான இரத்துச் செய்கை மற்றும் செலாவணி வீதங்கள் தொடர்பிலான நாளாந்த வழிகாட்டலின் நிறுத்தம் என்பவற்றினைத் தொடர்ந்து உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் வெளிநாட்டு செலாவணித் திரவத்தன்மையில் மேம்பாடொன்று பதிவுசெய்யப்பட்டது. செலாவணி வீதத்தில் ஏற்பட்ட உயர்வடைதலானது 2023 மாச்சு இறுதியில் பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் ஒப்புதலை நோக்கிய மேம்பட்ட சந்தை மனோபாவங்களையும் பிரதிபலித்தது. இதற்கமைய, 2023 ஏப்பிறல் 28 வரையான ஆண்டு காலப்பகுதியில், இலங்கை ரூபா ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக 12.9 சதவீதத்தினால் உயர்வடைந்தது. அதேவேளை, குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2023 ஏப்பிறல் 28 வரையான ஆண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபாவானது யூரோ, ஸ்ரேலிங் பவுன், யப்பானிய யென், இந்திய ரூபா மற்றும் அவுஸ்திரேலிய டொலர் என்பவற்றிற்கெதிராக உயர்வடைந்து காணப்பட்டது. இதன் விளைவாக, உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதமும் (REER 24) 2023 மாச்சு காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு உயர்வடைந்து காணப்பட்ட போதிலும் 100 சுட்டெண் புள்ளிகளின் மட்டத்திற்குப் பெருமளவு கீழால் தொடர்ந்தும் காணப்பட்டமையானது வெளிநாட்டுத்துறைப் போட்டித்தன்மையைக் குறித்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 13: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 14: உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீத (REER 24) அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 1: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு***

| நாணயம் | 2021 | 2022 | 2023 (ஏப்பிறல் 28 வரை) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | -7.0% | -44.8% | +12.9% |
| யூரோ | +1.1% | -41.4% | +9.1% |
| ஸ்ரேலிங் பவுன் | -6.0% | -38.1% | +8.8% |
| யப்பானிய யென் | +3.8% | -36.4% | +14.2% |
| அவுஸ்திரேலிய டொலர் | -1.2% | -40.8% | +15.1% |
| இந்திய ரூபா | -5.5% | -38.6% | +11.4% |

*தேய்வு (-)/உயர்வு (+) **மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**2023 ஏப்பிறலுக்கான வெளிநாட்டுத்துறைப் பத்திரிகை வெளியீடு 2023 மே 31 அன்று வெளியிடப்படும்.**

**இணைப்பு I:**

**வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் சுருக்கம் (அ)**

| வகை | மாச் 2022 (ஐ.அ.டொ. மில்) | மாச் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-மாச் 2022 (ஐ.அ.டொ. மில்) | சன-மாச் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 1,058 | 1,037 | -2.0 | 3,254 | 2,998 | -7.9 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 1,819 | 1,450 | -20.3 | 5,651 | 3,859 | -31.7 |
| வர்த்தக மீதி | -761 | -412 | | -2,397 | -861 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 161 (ஆ) | 198 (இ) | 22.8 | 482 (ஆ) | 530 (இ) | 9.8 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 318 | 568 | 78.5 | 783 | 1,413 | 80.6 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல்கள் (தேறிய) (உ) | 5 | -8 | | 90 | 1 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள் (மொத்தம்) | 306 | 93 | | 583 | 209 (உ) | |
| திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் | - | 93 | | 5 | 127 | |
| நீண்ட காலக் கடன்கள் | 306 | வி.கி | | 577 | 82 (உ) | |
| திரண்ட நிலுவை | | | | -2,269 | 858 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது
(ஆ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் 2022இல் திருத்தப்பட்டது
(இ) இத்தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2023 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்
(ஈ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்றது
(உ) 2023 மாச்சு மாதத்திற்கான நீண்ட காலக் கடன்களிற்கான தரவுகள் கிடைப்பனவாகவிருக்கவில்லை

**இலங்கை மத்திய வங்கி, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள்> பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு இன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.**
**https://www.cbsl.gov.lk/ta/node/6181**

**இணைப்பு II:**

**இலங்கை மத்திய வங்கியினால் வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் (அ)**

| வகை | மாச் 2022 (ஐ.அ.டொ. மில்) | மாச் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-மாச் 2022 (ஐ.அ.டொ. மில்) | சன-மாச் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **855.3** | **816.4** | **-4.6** | **2,632.7** | **2,374.7** | **-9.8** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 46.6 | 48.2 | 3.3 | 138.7 | 124.8 | -10.0 |
| விலங்குத்தீன் | 10.8 | 10.8 | 0.1 | 35.6 | 37.6 | 5.7 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 464.4 | 417.2 | -10.2 | 1,477.0 | 1,273.0 | -13.8 |
| இதில் ஆடைகள் | 424.9 | 379.5 | -10.7 | 1,360.6 | 1,157.9 | -14.9 |
| புடவைகள் | 28.5 | 28.5 | -0.3 | 84.0 | 88.9 | 5.9 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 11.0 | 9.3 | -15.6 | 32.4 | 26.1 | -19.6 |
| இறப்பர் உற்பத்திகள் | 81.3 | 87.5 | 7.6 | 251.7 | 232.8 | -7.5 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 39.7 | 51.1 | 28.7 | 98.5 | 137.7 | 39.7 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 44.3 | 57.9 | 30.8 | 133.8 | 161.0 | 20.4 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 13.8 | 8.6 | -37.5 | 34.0 | 23.0 | -32.3 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 55.5 | 39.3 | -29.2 | 179.5 | 130.2 | -27.5 |
| இரசாயன உற்பத்திகள் | 18.9 | 17.9 | -5.6 | 52.3 | 46.3 | -11.4 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 12.9 | 10.0 | -22.0 | 37.6 | 29.7 | -20.9 |
| அச்சிடல் கைத்தொழில் பொருட்கள் | 3.5 | 5.5 | 60.0 | 14.6 | 16.5 | 12.9 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 6.9 | 5.0 | -27.4 | 17.0 | 16.1 | -5.1 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 5.5 | 5.7 | 3.4 | 18.4 | 15.1 | -18.1 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 18.6 | 17.4 | -6.4 | 50.2 | 42.1 | -16.1 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 3.0 | 2.5 | -16.6 | 8.7 | 8.4 | -4.1 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 29.6 | 31.7 | 7.3 | 85.3 | 80.5 | -5.7 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **199.3** | **216.0** | **8.4** | **605.9** | **608.2** | **0.4** |
| தேயிலை | 94.7 | 110.1 | 16.3 | 286.8 | 314.3 | 9.6 |
| இறப்பர் | 4.7 | 3.7 | -20.7 | 14.6 | 10.8 | -26.3 |
| தேங்காய் | 36.7 | 28.8 | -21.7 | 104.7 | 75.8 | -27.7 |
| வாசனைத்திரவியங்கள் | 23.2 | 32.4 | 39.2 | 85.3 | 100.6 | 18.0 |
| காய்கறிகள் | 2.1 | 2.6 | 21.9 | 6.0 | 7.1 | 18.1 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.8 | 3.6 | 27.7 | 7.2 | 6.9 | -3.4 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 12.5 | 9.2 | -26.9 | 33.5 | 26.1 | -22.1 |
| கடலுணவு | 22.4 | 25.7 | 14.5 | 67.7 | 66.6 | -1.6 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **2.0** | **2.5** | **23.3** | **10.4** | **7.7** | **-26.1** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.7** | **2.6** | **54.5** | **5.2** | **7.0** | **34.8** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,058.2** | **1,037.5** | **-2.0** | **3,254.2** | **2,997.6** | **-7.9** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

**இணைப்பு III:**

**நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் (அ)**

| வகை | மாச் 2022 (ஐ.அ.டொ. மில்) | மாச் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-மாச் 2022 (ஐ.அ.டொ. மில்) | சன-மாச் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **203.9** | **226.4** | **11.0** | **632.9** | **648.8** | **2.5** |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 26.4 | 29.1 | 10.0 | 77.6 | 75.6 | -2.6 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 6.6 | 6.5 | -1.0 | 18.1 | 17.5 | -3.5 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 38.6 | 29.6 | -23.3 | 112.1 | 82.9 | -26.0 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 116.1 | 141.2 | 21.7 | 369.7 | 413.1 | 11.7 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **12.3** | **18.6** | **51.2** | **33.3** | **41.5** | **24.4** |
| 11 குடிபானங்கள் | 3.8 | 7.8 | 106.2 | 9.6 | 17.1 | 78.1 |
| 12 புகையிலை மற்றும் புகையிலைத் தயாரிப்புக்கள் | 8.5 | 10.7 | 26.6 | 23.7 | 24.4 | 2.7 |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **40.7** | **35.5** | **-12.7** | **121.1** | **99.9** | **-17.5** |
| 23 மசகு இறப்பர் | 4.9 | 3.9 | -20.3 | 15.0 | 11.1 | -25.8 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 21.3 | 20.2 | -4.8 | 62.9 | 54.1 | -14.0 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **55.5** | **38.8** | **-30.2** | **179.5** | **129.6** | **-27.8** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 55.5 | 38.8 | -30.2 | 163.6 | 129.6 | -20.8 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | - | - | - | 15.9 | - | - |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **9.4** | **5.2** | **-44.6** | **25.4** | **15.1** | **-40.5** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 6.9 | 5.2 | -24.6 | 17.8 | 14.9 | -15.9 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **23.9** | **21.8** | **-8.5** | **64.1** | **57.0** | **-11.1** |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **163.2** | **178.0** | **9.1** | **461.5** | **484.1** | **4.9** |
| 62 இறப்பர் தயாரிப்புக்கள் வே.எ.கு | 58.5 | 65.6 | 12.0 | 173.3 | 175.2 | 1.1 |
| 65 புடவை நூழிழை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 37.6 | 33.8 | -10.2 | 110.6 | 101.4 | -8.3 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 44.7 | 56.2 | 25.7 | 112.4 | 151.4 | 34.7 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **56.5** | **64.4** | **14.0** | **163.4** | **178.9** | **9.5** |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 27.3 | 33.7 | 23.5 | 82.8 | 97.0 | 17.1 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **492.5** | **448.7** | **-8.9** | **1,572.7** | **1,342.6** | **-14.6** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 450.4 | 404.1 | -10.3 | 1,447.8 | 1,225.0 | -15.4 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **0.3** | **...** | **-84.4** | **0.3** | **0.1** | **-72.3** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,058.2** | **1,037.5** | **-2.0** | **3,254.2** | **2,997.6** | **-7.9** |

(அ) தற்காலிகமானது
வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை
... புறக்கணிக்கத்தக்கவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும்.
https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf

**இணைப்பு IV:**

**இலங்கை மத்திய வங்கியினால் வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)**

| வகை | மாச் 2022 (ஐ.அ.டொ. மில்) | மாச் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-மாச் 2022 (ஐ.அ.டொ. மில்) | சன-மாச் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **282.0** | **266.0** | **-5.7** | **940.8** | **686.7** | **-27.0** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 163.9 | 145.2 | -11.4 | 512.5 | 378.3 | -26.2 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 35.7 | 5.0 | -86.1 | 137.9 | 34.2 | -75.2 |
| பால் உற்பத்திகள் | 29.4 | 16.5 | -43.8 | 82.9 | 45.9 | -44.7 |
| காய்கறிகள் (ஆ) | 28.1 | 29.9 | 6.4 | 90.6 | 74.0 | -18.4 |
| கடலுணவு | 6.4 | 3.5 | -45.3 | 22.9 | 10.5 | -54.1 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 22.7 | 58.5 | 157.8 | 66.5 | 126.4 | 90.1 |
| வாசனைத்திரவியங்கள் | 14.7 | 9.5 | -35.7 | 41.6 | 32.0 | -22.9 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 26.9 | 22.3 | -16.9 | 70.1 | 55.3 | -21.1 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 118.1 | 120.8 | 2.3 | 428.3 | 308.4 | -28.0 |
| தனியாள் ஊர்திகள் | 0.7 | 5.6 | 680.0 | 2.1 | 10.2 | 390.2 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 42.9 | 68.8 | 60.4 | 166.4 | 161.8 | -2.7 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 12.2 | 4.3 | -64.5 | 46.2 | 11.6 | -75.0 |
| புடவை மற்றும் துணைப்பொருட்கள் | 23.5 | 13.5 | -42.3 | 72.0 | 45.7 | -36.6 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 10.2 | 3.9 | -62.1 | 35.5 | 11.5 | -67.6 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 12.0 | 7.8 | -35.0 | 48.0 | 23.1 | -52.0 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 16.6 | 16.9 | 1.6 | 58.0 | 44.6 | -23.2 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **1,177.8** | **971.8** | **-17.5** | **3,610.1** | **2,580.0** | **-28.5** |
| எரிபொருள் | 519.8 | 391.0 | -24.8 | 1,412.3 | 1,076.4 | -23.8 |
| இதில் மசகெண்ணெய் | - | 49.7 | - | 110.1 | 157.3 | 42.9 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 429.9 | 273.2 | -36.4 | 1,079.9 | 712.4 | -34.0 |
| நிலக்கரி | 90.0 | 68.1 | -24.3 | 222.3 | 206.7 | -7.0 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 22.4 | 25.7 | 14.9 | 48.9 | 68.1 | 39.4 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 240.8 | 221.2 | -8.2 | 880.5 | 604.6 | -31.3 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 40.6 | 34.3 | -15.5 | 122.2 | 108.1 | -11.5 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 21.8 | 26.7 | 22.4 | 56.9 | 70.0 | 23.1 |
| கோதுமை மற்றும் சோளம் | 24.2 | 41.6 | 71.8 | 81.7 | 81.2 | -0.7 |
| அடிப்படை உலோகங்கள் | 31.4 | 16.9 | -46.3 | 177.8 | 44.2 | -75.1 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 64.1 | 41.7 | -35.0 | 208.0 | 108.2 | -48.0 |
| இரசாயன உற்பத்திகள் | 87.2 | 76.4 | -12.4 | 266.5 | 191.1 | -28.3 |
| வளமாக்கி | 14.9 | 24.6 | 65.2 | 21.6 | 40.0 | 85.6 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 29.9 | 15.3 | -48.8 | 97.1 | 40.8 | -58.0 |
| கனிம உற்பத்திகள் | 16.9 | 7.2 | -57.1 | 45.8 | 20.1 | -56.1 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 63.7 | 49.1 | -22.9 | 190.8 | 127.1 | -33.4 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **358.5** | **209.9** | **-41.4** | **1,098.8** | **589.6** | **-46.3** |
| பொறி மற்றும் கருவிகள் | 227.2 | 143.7 | -36.7 | 695.2 | 403.5 | -42.0 |
| கட்டடப் பொருட்கள் | 102.3 | 53.3 | -47.9 | 341.8 | 165.3 | -51.6 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 28.6 | 12.7 | -55.5 | 60.4 | 20.0 | -66.9 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.4 | 0.2 | -54.7 | 1.4 | 0.8 | -41.0 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.7** | **1.9** | **187.5** | **1.6** | **2.3** | **45.2** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,818.9** | **1,449.5** | **-20.3** | **5,651.2** | **3,858.6** | **-31.7** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **1,299.1** | **1,058.5** | **-18.5** | **4,238.9** | **2,782.1** | **-34.4** |

(அ) தற்காலிகமானவை

(ஆ)பருப்பு வகை, வெங்காயம், உருளைக்கிழங்கு, அவரை வகை மற்றும் பிற காய்கறிகளை உள்ளடக்குகின்றது

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## இணைப்பு V:

### நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிச் செலவினம் (அ)

| வகை | மாச் 2022 (ஐ.அ.டொ. மில்) | மாச் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-மாச் 2022 (ஐ.அ.டொ. மில்) | சன-மாச் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **206.6** | **210.4** | **1.9** | **650.8** | **523.9** | **-19.5** |
| 02 பாற்பண்ணை உற்பத்திகள் மற்றும் பறவைகளின் முட்டைகள் | 29.6 | 16.7 | -43.6 | 83.1 | 46.0 | -44.6 |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 6.5 | 3.6 | -44.4 | 23.2 | 10.9 | -53.3 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 59.3 | 46.5 | -21.6 | 218.3 | 115.7 | -47.0 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 36.6 | 34.7 | -5.2 | 113.0 | 85.6 | -24.3 |
| 06 சீனி, சீனித் தயாரிப்புகள் மற்றும் தேன் | 22.7 | 58.5 | 157.8 | 66.5 | 126.4 | 90.1 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 18.2 | 13.6 | -25.2 | 53.9 | 43.8 | -18.8 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **8.2** | **9.0** | **9.9052** | **25.4** | **25.7** | **0.9** |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **45.4** | **24.2** | **-46.8** | **141.1** | **68.2** | **-51.7** |
| 23 மசகு இறப்பர் | 25.2 | 11.3 | -55.0 | 81.2 | 29.7 | -63.4 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 1.7 | 3.1 | 86.1 | 7.0 | 10.4 | 49.7 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **519.8** | **391.1** | **-24.8** | **1,412.3** | **1,076.4** | **-23.8** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 407.0 | 295.6 | -27.4 | 1,120.4 | 792.3 | -29.3 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 22.8 | 27.4 | 19.8 | 69.6 | 77.4 | 11.3 |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **19.8** | **16.6** | **-16.3** | **36.9** | **27.8** | **-24.6** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 17.1 | 16.0 | -6.4 | 30.2 | 25.3 | -16.0 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **205.9** | **205.7** | **-0.1** | **659.7** | **489.5** | **-25.8** |
| 54 மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் | 40.2 | 64.1 | 59.6 | 156.6 | 150.7 | -3.8 |
| 56 வளமாக்கி மற்றும் தயாரிக்கப்பட்டவை | 14.9 | 24.6 | 65.1 | 21.6 | 40.0 | 85.5 |
| 57 ஆரம்ப வடிவத்தில் பிளாத்திக்குகள் | 45.6 | 26.5 | -41.9 | 150.6 | 66.9 | -55.6 |
| 58 ஆரம்ப வடிவத்தில் அல்லாத பிளாத்திக்குகள் | 14.3 | 11.1 | -22.3 | 50.1 | 32.3 | -35.5 |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **456.5** | **359.7** | **-21.2** | **1,627.0** | **1,015.2** | **-37.6** |
| 64 தாள், தாள் அட்டைகள் மற்றும் அவற்றின் பொருட்கள் | 37.5 | 32.2 | -14.1 | 113.9 | 104.0 | -8.7 |
| 65 புடவை நூழிலை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 238.9 | 215.1 | -10.0 | 866.2 | 585.1 | -32.5 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 63.2 | 42.8 | -32.3 | 166.8 | 121.7 | -27.0 |
| 67 இரும்பு மற்றும் உருக்கு | 47.7 | 21.1 | -55.8 | 240.6 | 59.5 | -75.3 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **282.7** | **168.6** | **-40.4** | **850.0** | **455.9** | **-46.4** |
| 72 குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கான சிறப்பியல்புவாய்ந்த பொறி | 52.7 | 16.8 | -68.0 | 165.4 | 51.5 | -68.9 |
| 74 பொதுவான கைத்தொழில்களுக்கான பொறி மற்றும் கருவிகள் வே.எ.கு பொறி உதிரிப்பாகங்கள் | 46.9 | 27.5 | -41.4 | 151.7 | 84.0 | -44.6 |
| 75 அலுவலக எந்திரங்கள் மற்றும் தன்னியக்க தரவு செயன்முறைப்படுத்தல் எந்திரங்கள் | 22.5 | 13.4 | -40.4 | 72.1 | 33.3 | -53.8 |
| 76 தொலைத்தொடர்பூட்டல் மற்றும் ஒலிப் பதிவுகள் மற்றும் மீள் தயாரிப்பு பொறிகள் மற்றும் கருவிகள் | 42.0 | 12.8 | -69.5 | 107.8 | 36.0 | -66.6 |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 65.9 | 54.8 | -16.9 | 200.3 | 139.0 | -30.6 |
| 78 வீதி ஊர்திகள் | 18.4 | 17.2 | -6.2 | 56.5 | 37.0 | -34.5 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **72.3** | **60.5** | **-16.3** | **245.4** | **171.6** | **-30.1** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 19.8 | 12.7 | -35.8 | 60.7 | 42.0 | -30.8 |
| 87 தொழில்சார், விஞ்ஞான மற்றும் கட்டுப்பாட்டுச் சாதனங்கள் மற்றும் வே.எ.கு கருவிகள் | 14.1 | 13.3 | -5.9 | 47.2 | 33.0 | -30.1 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **1.6** | **3.8** | **140.7** | **2.6** | **4.4** | **69.9** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,818.9** | **1,449.5** | **-20.3** | **5,651.2** | **3,858.6** | **-31.7** |

(அ) தற்காலிகமானது

வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும். https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf